Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 9 / 2022

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | குமார் | Calling: | Chief Pharmacist |
| Father's / Husband's Name: | ராஜகோபால் | Religion: | |
| Village: | ஜனதாபுரம் | Age: | 59 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 13.08.2025

(எதிரி ஆஜர்.)

பு.சா. 1 சாட்சி அழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

நான் சொல்லியதின் அடிப்படையில் தான் எனது வழக்கறிஞர் புகார் மனுவை, சட்ட அறிவிப்பை மற்றும் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார் என்றால் சரிதான். எதிரியை எனக்கு 10 வருடங்களாக தெரியும். எதிரியின் தாயார் என்னுடன் பணிபுரிந்தார். நான் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் மருந்தாளுனராக பணிபுரிந்து வருகிறேன். எதிரியின் தாயார் மருத்துவமனையில் பணியாளராக பணிபுரிந்தார். நான் அரசு ஊழியர் என்றால் சரிதான். சட்ட திட்டங்கள் எல்லாம் தெரியும் என்றால் சரிதான். நான் எதிரிக்கு கடனை 04.01.2021ம் தேதி ரூ. 20,00,000 கொடுத்தேன். எவ்வாறு ரூ. 20,00,000 கொடுத்தேன் என்றால் எனது நண்பர் நடராஜன் என்பவரிடம் பணத்தை பெற்று பணமாக தான் எதிரியிடம் கொடுத்தேன். பகுதி பகுதியாக நான் எந்தெந்த தேதியில் பணத்தை நான் எதிரிக்கு கொடுத்தேன் என்றால் அது நினைவில்லை. எதற்காக நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எதிரியின் தாயாருக்கு இதய அறுவை

சிகிச்சைக்காகவும், எதிரி நடத்திவரும் டிராவல்ஸ் தொழிலில் அவரது வாகனத்தை ஜப்தி செய்து விட்டார்கள் என்பதற்காகவும் கடன் வாங்கினார்.

இதய அறுவை சிகிச்சைக்காக ரூ. 13,00,000 கொடுத்தேன். வாகனங்கள் ஜப்தியானதற்காக ரூ 600,000 கொடுத்தேன். ரூ 1300000ஐ எவ்வகை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் அது நினைவில்லை. ரூ. 600000 எவ்வகை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் மற்றும் 100 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். மேற்படி விவரத்தை நான் சட்ட அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் 04.01.2021ம் தேதி ரூ. 2000000ஐயும் கொடுக்கவில்லை அதை பிரித்து வெவ்வேறு தேதிகளில் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். 04.01.2021ம் தேதி நான் செக்யூரிட்டிக்காக நான் என்ன வாங்கினேன் என்றால் எதுவும் வாங்கவில்லை, எதிரியின் தாயாரின் ஓய்வு பெற்ற பணத்தில் 3 மாதங்களுக்குள் திருப்பி தருவதாக சொல்லியதால் பணத்தை கொடுத்தேன். அந்த தேதியில் நான் எதிரியிடமிருந்து பாண்ட் அல்லது புரோநோட் வாங்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எனது சட்ட அறிவிப்பில் சொல்லியிருந்தால் இவ்வழக்கிற்காக சொல்லிய கதை என்றால் இல்லை.

சட்ட அறிவிப்பு பொய் என்று சொன்னால் அதில் சொல்லியுள்ள விவரங்கள் நினைவில்லை. எந்த தேதியில் நான் காசோலையை எதிரியிடமிருந்து பெற்றேன் என்றால் 06.09.2021ம் தேதி பெற்றேன். 3 மாதத்தில் பணத்தை திரும்பி செலுத்தி விடுவதாகவும் அதுவரை காசோலை எண் 990469 வைத்துக்கொள்ளும்படி கூறினார். 07.09.2021ம் தேதி மற்றொரு காசோலையும் வழங்கினார். 3 மாதங்கள் பணத்தை திரும்ப தரவில்லை என்பதால் என்னிடம் தந்த காசோலையை 3 மாதங்கள் கழித்து நான் வங்கியில் சமர்பித்தேன். காசோலை எண் 990469 ல் ரூ. 800000 போட்டுக்கொடுத்தார். காசோலையை எதிரி தான் நிரப்பி கொடுத்தாரா என்றால் ஆமாம். 06.09.2021ம் தேதி ரூ. 800000 ற்கான காசோலையை பெற்றுக்கொண்டேன். காசோலையை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் நிரப்பப்பட்டள்ளது என்றால் ஆங்கிலத்தில் நிரபப்ப்பட்டுள்ளது. எதிரியிடம் பணத்தை எத்தனை முறை நான் திரும்ப கேட்டேன் என்றால் 100 முறை கூட இருக்கலாம்.

அவரிடம் தொலைபேசி மூலமாகவும், வீட்டிற்கு சென்றும் பணத்தை திரும்ப கேட்டேன். எதிரிக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் அதை

குறித்து எனக்கு தெரியாது. காசோலையை கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதில் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. எதிரி கொடுத்த காசோலையை 03.12.2021 ம் தேதி வங்கியில் செலுத்தினேன். எதிரியிடம் செலுத்துவது குறித்து கூறினேனா என்றால் கூறினேன். என்னிடம் கிராஸ் காசோலை கொடுத்தாரா என்றால் இல்லை. எத்தனை மணியளவில் நான் வங்கிக்கு சென்றேன் என்றால் 03.00 மணியளவில் சென்று சமர்பித்தேன். அன்று மாலை 05.30 மணியளவே காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது தெரியவந்தது. அதே நேரத்தில் ரிட்டர்ன் மெமோவும் கொடுக்கப்பட்டது. அதன் பின்பும் எதிரியிடம் அனுகியபோது பணத்தை திரும்ப தருவதாக கூறினார்.

நான் வருமானவரிசெலுத்துபவரா என்றால் ஆமாம். நான் கொடுக்கல் வாங்கலுக்கு கணக்கு வைத்துள்ளேன் என்றால் சரிதான். பாலாஜிக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 04.01.2021 ல் நான் ரூ.20,00,000/– கொடுத்தேன். மேற்படி பணம் வருமான வரி கணக்கில் வருகிறதா என்றால் இல்லை, நான் நகையை வைத்து கொடுத்தேன். நகை யாருடையது என்றால் என் மனைவியுடையது. நான் நகை வைத்துகொடுத்ததாக சொல்லும் பணத்திற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ அல்லது தனிபிராதிலோ, முதன்மை சாட்சியத்திலோ மேற்படி விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை குறிப்பிடாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் மேற்படி என் மனைவி நகையை வைத்ததற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அதற்கான காரணம் என்னவென்றால் நான் 11 மாதத்திற்கு ஒரு முறை அந்த நகைகளை மாற்றி வைப்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. 04.01.2021ம் தேதிக்கு முன்பு நகை வைத்ததற்கான ரசீதுகளை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. எதிரிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரூ.20,00,000/–எந்தெந்த தேதிகளில் கொடுத்தேன் என கூறமுடியுமா என்றால் முடியாது, எவ்வளவு ரூபாய் எந்தெந்த தேதியில் கொடுத்தேன் என்று சொல்ல முடியுமா என்றால் அதுவும் சொல்ல முடியாது. எதிரியின் தாயார் கலாவதி என்னுடன் மருத்துவ துறையில் வேலை செய்தார் என்றால் சரிதான்.

நான் எந்த வகையான சீட்டு நடத்துகிறேன் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. எதிரி அனுப்பிய பதிலறிவிப்பில் என்னென்ன சங்கதிகள்

குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு நினைவில்லை. ரூ.20,00,000/—ற்கு என்ன வகையான புரோநோட் கொடுத்தார் என்றால் ஒரு ரூபாய் பிரிண்டெட் செய்த முத்திரை தாள் கொண்ட புரோநோட். அதில் ஒரு ரூபாய் வில்லை ஒட்டப்பட்டிருந்தது. அந்த புரோநோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். மேற்படி புரோநோட் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ரூ.8,00,000/—ற்கான காசோலை எப்போது எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் 07.06.2021ம் தேதி. என்னுடைய முதன்மை சாட்சியத்திலும், தனி பிராதிலும் ரூ.20,00,000/—ற்கு புரோநோட் என்னிடம் உள்ளது என்றும், அதன் பின்னிட்டு மேற்கண்ட தேதியில் ரூ.8,00,000/—ற்கான காசோலை கொடுத்தார் என்றும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 04.01.2021 ம் தேதி கொடுத்த புரோநோட்டை குறித்து இன்றைய தேதி வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் செக் கொடுத்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி ரூ.20,00,000/—ற்கான வட்டியை மாதத்திற்கு ரூ.40,000/—வீதம் சுமார் 4 மாதம் கொடுத்தார். மேற்படி விவரத்தை முதன்மை சாட்சியத்திலும், தனிபிராதிலும் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

என் மனைவி நகைகளை எந்த வங்கியில் வைத்தேன் என்றால் பாரத ஸ்டேட் வங்கி. நான் ஏற்கனவே 13.12.2023ம் தேதி குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் நடராஜனிடம் வாங்கிக்கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளது சரியா என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியமளித்தது படி நடராஜனிடம் வாங்கிக்கொடுத்த பணத்திற்காக என் மனைவி நகையை அடகு வைத்து கொடுத்தேன் என்று தற்போது சாட்சியமளிக்கிறேன். மேற்படி விவரங்களை குறித்தும் முதன்மை சாட்சியத்திலும், தனிபிராதிலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே ரூ.20,00,000/—ற்கான புரோநோட்டை வைத்துக்கொண்டு ஏற்கனவே சீட்டு எடுக்கும் சமயத்தில் செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலைகளை வைத்து தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சீட்டு நடத்தவில்லை. என்னிடம் சீட்டு போட்ட நபர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். ஏற்கனவே எதிரியும், அவரது தாயாரும் தனியாகவும், கூட்டாகவும் காசோலைகளை கொடுத்து அதன்பேரில் தாக்கல் செய்த வழக்குகள் விவரம் குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும்

என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களை குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் வங்கியில் நகைகளை அடகு வைத்தது எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் கடந்த 2021ம் ஆண்டு முதல் அடகில் உள்ளது. மேற்படி விவரம் குறித்து வங்கிக்கு சம்மன் சார்பு செய்து விசாரிப்பதில் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கு ரூபாய் 20,00,000 கடன் கொடுத்தது போல நான் எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்தேன் என்றால் யாருக்கும் கொடுக்கவில்லை இவருக்கு மட்டும் தான் கொடுத்தேன். கடன் கொடுப்பதும் , கடன் வாங்குவதும் அரசு விதிப்படி தவறு என்றால் சரிதான். கடன் கொடுப்பதற்கு துறை ரீதியாக என் மேல் அதிகாரியிடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. வருமான வரிச்சட்டப்படி இவ்வளவு பெரய தொகையை கடனாக கொடுப்பது தவறு என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. எனது வருமான பற்றிய ஆவணங்களையும் வங்கி பரிவர்த்தனை பற்றிய ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்தில் உரிய பிரிவுகளின் கீழ் மனுத்தாக்கல் செய்ய உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. கடன் கொடுப்பதற்கான பைனாஸ் லைசன்ஸ் வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் , தவறான ஆவணங்களை வைத்து எதிரிக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளேன் என்றலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.13 17:47:43 +0530